இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர்: கலைஞர் மு.கருணாநிதி
புதன்கிழமை 17-09-2025

# ஒரு தமிழன் என்பதால்...!

இளையராஜாவுக்கு ‘இசைஞானி’ என்று பட்டம் சூட்டினார் முத்தமிழறிஞர் கலைஞர். ‘அது எனக்கு பட்டமாக அல்ல, பெயராகவே ஆகிவிட்டது’ என்றார் இளையராஜா.

1994 ஜனவரி 21ம் தேதி சென்னையில் ஆர்.ஆர்.சபாவில் முத்தமிழ் பேரவையின் சார்பில் நடந்த விழாவில் நாதஸ்வர வித்வான் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் நினைவாக இளையராஜாவுக்கு ‘ராஜரத்தினா’ விருதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். அந்த விழாவில் பேசிய கலைஞர் அவர்கள், **“இளையராஜாவுக்கு இசைஞானி என்ற பட்டத்தை முன்பு, காரைக்குடியில் நடந்த விழாவில் நான்தான் வழங்கினேன். அதன் பிறகு அவர் எவ்வளவோ பட்டங்களைப் பெற்று விட்டார். பெண்கள் எவ்வளவோ ஆபரணங்கள் அணிந்தாலும் மங்கலத் தாலிக்கு அவை ஈடாகாது. அதுபோல காரைக்குடியில் நான் முதலில் கட்டிய தாலியான ‘இசைஞானி’ என்ற பட்டத்துக்கு அடுத்தப்படிதான் மற்ற பட்டம் எல்லாம். முன் கூட்டியே திட்டமிடாமல் இதயத்தில் இருந்த விருப்பத்தினால் அந்தப் பட்டத்தை நான் அவருக்கு வழங்கினேன்”** என்றார்.

இளையராஜா எத்தனையோ பட்டங்களைப் பெற்றாலும் கலைஞர் அவர்கள், தன் இதயத்தில் இருந்து வழங்கிய இசைஞானி பட்டம்தான் பட்டிதொட்டி எங்கும் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. திரைப்பட விளம்பரங்களிலும் திரைப்படங்களிலும் ‘இசைஞானி இளையராஜா’ என டைட்டில் கார்டு இடம்பெறுகிறது.

இதோ இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘இசை ராஜா’ என்ற பட்டத்தைச் சூட்டி இருக்கிறார். அது இன்னொரு பெயராகவே ஆகப் போகிறது.

இசையுலகத்தின் மாபெரும் மேதையான இளையராஜாவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்திய பாராட்டு விழா என்பது பத்தோடு பதினொன்று என்பது மாதிரியான விழா அல்ல. ‘உலகில் எங்கும் ஒரு கலைஞனுக்கு, அதுவும் இசைக் கலைஞனுக்கு அரசாங்கம் இப்படி ஒரு விழா நடத்தியதாகக் கேள்விப்படவே இல்லை’ என்று இளையராஜா அவர்கள் சொன்னது போன்ற விழா. ஒரே ஒரு ஊரில், ஒரே ஒரு ராஜா என்பது போல, ஒரே ஒரு இசை ராஜாவுக்கு இத்தகைய விழா நடத்தப்பட்டுள்ளது.

இந்த விழா குறித்து சமூக ஊடகங்களில் வந்த பாராட்டுகள்தான் மிக மிக முக்கியமானது. எழுத்தாளர் சபிதா எழுதி இருக்கிறார்... **“முதலில் தமிழக முதலமைச்சருக்கு இதயபூர்வமான நன்றி. கட்சி சார்பாகவோ, அரசுக்கு ஆதரவாகவோ இல்லை. ஒரு இசையின் ரசிகையாக இருந்து இதை உளமாரச் சொல்கிறேன். கலைஞரின் மகன் என்பதை கலைஞருமே உணர்ந்திருக்கக் கூடிய தருணம் நேற்று. சாதாரணமாக நடைபெறும் சிறு அளவிலான மாவட்ட பொது நிகழ்ச்சிகளிலேயே அரசியல் தலையீடு எப்படி இருக்கும் என்பதை அறிந்திருக்கிறோம். ஆனால் நேற்று முழுமையான இசைஞானி விழாவாக மட்டுமே இருந்தது. எங்கெங்கு காணினும் இளைய ராஜாவின் படங்கள், அமைச்சர்கள், கட்சி உறுப்பினர்கள் என அனைவருமே பின்னாலிருந்து ராஜாவை மட்டுமே பெருமைப்படுத்திய நிகழ்ச்சி.**

**முதலமைச்சர் அவர்கள் விழா ஆரம்பித்தது முதல் கடைசிவரை இருந்து ரசித்தது, ஒவ்வொரு முறையும் ராஜா எழுந்து நிற்கும்போதும் வரும்போதும் கூடவே மரியாதை செய்தது, இசைஞானி இளையராஜா பேரில் இனி வருடத்திற்கொருமுறை விருதுகள் வழங்கப்படும் என அறிவித்தது, பாரத ரத்னா விருதுக்காக கோரிக்கை வைத்தது எல்லாவற்றிற்கும் மேலாக சங்க பாடல்களுக்கு இசையமைக்கும்படி ராஜாவைக் கேட்டுக்கொண்டது எனச் சொல்லிக் கொண்டே போகலாம்.**

**துணை முதலமைச்சர் உதயநிதியின் வரவேற்புரை கூட நிகழ்ச்சியின் தன்மைக்கேற்ப பாந்தமாக இருந்தது. எங்கும் தங்களை முன்வைத்துக் கொள்ளாமல் இசை நிகழ்வை அற்புதமாக நடத்திய தமிழக அரசுக்கும், எந்த நெருக்கடியோ குழப்பங்களோ ஏற்படாமல் தெளிவான திட்டங்களை வகுத்து அதை செவ்வனே செயல்படுத்திய அதிகாரிகளுக்கும் மிக்க நன்றி”** என்று எழுதி இருக்கிறார்.

ஸ்ருதி டி.வி. உரிமையாளர் கபிலன் எழுதி இருக்கிறார்.. “அரை நூற்றாண்டாக உலகமெங்கும் வாழும் தமிழர்களை தனது இசையால் தாலாட்டி வரும் இசைஞானி இளையராஜாவுக்கு பாராட்டு விழா நடத்திய தமிழக முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், நிகழ்வுக்கு உடன் உழைத்த மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்!

சிம்பொனி கலைஞர்களுக்கு முந்தைய நாளே துணை முதல்வர் உதயநிதி நேரில் சென்று சிறப்பு விருந்து மற்றும் பரிசுகளை அளித்தார். யோசித்துப் பாருங்கள் — ஒரு மாநிலத்தின் துணை முதல்வர் நேரடியாக வந்து உரையாடி சென்றது அந்த கலைஞர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி தந்திருக்கும்!

முன்பெல்லாம் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்தால் அனைவருக்கும் கிடைக்காது. ஆனால் நேற்றைய நிகழ்ச்சி — அனைத்து சேனல்களும் ஒளிபரப்ப media out தலைமைச் செயலகத்தில் இருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. Digital mediaக்காக DIPRன் YouTube சேனலில் logo இல்லாமல், pure raw out கொடுக்கப்பட்டது.(raw out என்பது — முதல்வரின் படமோ, நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு பேனரையோ வீடியோ மீது overlay செய்யப்படாமல், சுத்தமான காட்சி அளிப்பது.) இது எதிர்பாராதது.

நேற்று இரவு இளையராஜா நிம்மதியாக தூங்கி இருப்பார். கலைஞரின் மகன் நடத்தும் அரசு, ஒரு இசை கலைஞருக்கு விழா எடுக்கவில்லை என்றால் தான் ஆச்சர்யம்” என்று எழுதி இருக்கிறார் ஸ்ருதி டி.வி.கபிலன்.

**பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு முன்னால், முதலமைச்சரிடம் இளையராஜா அவர்கள் கேட்டார்கள்... “எதுக்காக என் மீது அவர் இவ்வளவு பாசம் வைத்திருக்கிறார் என்பதை இப்போது வரைக்கும் என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை” என்றார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மெல்லச் சிரித்தார்கள்.**

**ஒரே காரணம் தான், இளையராஜா தமிழன் என்பதால்! உலகை வென்ற தமிழன் என்பதால்! உலகுக்கு தமிழர்தம் கலையைக் கொண்டு சேர்த்த தமிழன் என்பதால்!**




கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (15.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தின் சார்பில் உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்வில், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.9.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், “அன்புக்கரங்கள்” திட்டத்தை தொடங்கி வைத்து, அன்புக்கரங்கள் திட்ட பயனாளிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, திருமதி. பி.கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வக்பு வாரிய திருத்தச் சட்டம்: உச்சநீதிமன்ற உத்தரவு

# இஸ்லாமியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் விதத்தில் உள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை, செப். 17 –

“வக்பு வாரிய திருத்தச் சட்டம் குறித்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு, இஸ்லாமியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் விதத்தில் உள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

இது குறித்து முதல்வரின் சமூக வலைதளப் பதிவு வருமாறு: –

**தி.மு.க.வும் மற்ற மனுதாரர்களும் வக்பு திருத்தச் சட்டத்துக்கு எதிராகத் தொடர்ந்த வழக்கில், ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள முக்கியத் திருத்தங்களுக்குத் தடை விதித்து மாண்பமை உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.**

**1) வக்புக்குச் சொத்தை அளிக்க, 5 ஆண்டு இஸ்லாத்தைக் கட்டாயமாக நடைமுறையில் கடைப்பிடித்திருக்க வேண்டும் எனும் விதிக்குத் தடை**

**2) வக்பு நிலத்தை அரசு நிலம் என்று ஒரு குற்றச்சாட்டு எழுந்தாலே, உரிய அதிகாரி அறிக்கை அளிக்கும் வரை அல்லது அரசு முடிவெடுக்கும் வரை அச்சொத்தைப் பறிக்கும் அதிகாரத் துக்குத் தடை**

**3) ‘வக்பு பயனர்’ என்பதை நீக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கான அதிகாரத்துக்குத் தடை (நீண்டகால மதப் பயன் பாட்டின் அடிப்படையில் வக்பு சொத்துகளாகக் கருதப்படும் சொத்து)**

**4) மத்திய வக்பு வாரியத்தில் நான்குக்கும் மேற்பட்ட முஸ்லீம் அல்லா தோரை சேர்ப்பது, மாநில வக்பு வாரியங்களில் மூன்றுக்கும் மேற்பட்ட முஸ்லீம் அல்லாதோரைச் சேர்ப்பதற்குத் தடை. இதனால், இந்த வாரியங்களில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக இருப்பது உறுதி செய்யப்படும்.**

**ஒன்றிய பா.ஜ.க. அரசு அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராக, சட்ட விரோதமாகச் செய்துள்ள திருத்தங்களை நீக்குவதை நோக்கிய முக்கிய நகர்வாக இன்றைய நீதிமன்ற உத்தரவு அமைந்துள்ளது.**

**இந்த சட்டத்திருத்த முன்வரைவு நாடாளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப் பட்டதில் இருந்தே, தி.மு.க. இதனைத் தொடர்ச்சியாக எதிர்த்து வந்துள்ளது. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள பலரோடு சேர்ந்து வெற்றியும் கண்டுள்ளது. தி.மு.க. தலைமையிலான தமிழ்நாடு அரசும் ஒன்றிய அரசு வக்பு திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்திச் சட்டமன்றத்தில் திர்மானம் நிறைவேற்றி, ஆட்சி அதிகாரத்தைத் தவறாகப் பயன் படுத்தும் பா.ஜ.க.வின் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தது.**

**இந்நிலையில், இன்றைய உத்தரவு இஸ்லாமியர்களின் மத உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் அரசியலமைப்புச் சட்டத்தையும் மாண்பமை உச்ச நீதிமன்றம் பாதுகாக்கும் என மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வலுப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.**

**இவ்வாறு முதல்வர் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

## “தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்”!

# தமிழ்நாடெங்கும் கழகத்தினர் ஒன்றுதிரண்டு உறுதிமொழி ஏற்பு!

## கழகத் தலைவர் அறிவுரையேற்று உறுதிமொழி ஏற்பு நிகழ்வு!

சென்னை, செப். 17-

திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், “ஓரணியில் தமிழ்நாடு” இயக்கத்தின் இரண்டாம் கட்டமாக, பேரறிஞர் சி.என். அண்ணா பிறந்தநாளான நேற்று முன்தினம் (15.09.2025), தமிழ்நாட்டின் 68,000க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் “தமிழ்நாட்டைத் தலை குனிய விடமாட்டோம்” எனும் உறுதிமொழியை ஏற்கப்பட்டது.

ஓரணியில் தமிழ்நாடு இயக்கம், மண் மொழிமானம் காக்கும் நோக்கில், ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களை இணைத்துள்ளது. இதன் முதற்கட்டம் ஜூலை 1 முதல் 70 நாட்களுக்கும் மேல் நடைபெற்று, திமுகவின் 7 லட்சம் தொண்டர்கள் மூலம் 68,000 வாக்குச்சாவடிகளில் உள்ள குடும்பங்களைச் சந்தித்தனர்.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான இன்று, மாநிலம் முழுவது முள்ள 68 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குச்சாவடிகளில் அந்தந்த வாக்குச்சாவடிக்குட்பட்ட பகுதியில் அவர்களை ஒன்றுதிரட்டி, உறுதிமொழியேற்றிட வேண்டும் என முதலமைச்சர் அறிவுறுத்தியிருந்தார். இதனையடுத்து தமிழ்நாடு முழுவதும், ஒவ்வொரு வாக்குச்சாவடிக்குட்பட்ட பகுதிகளிலும் திமுகவில் இணைந்த குடும்பத்தினர் தமிழ்நாட்டை தலைகுனியவிடமாட்டோம் என உறுதிமொழியேற்றனர். தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற உறுதிமொழி யேற்பு நிகழ்வுகளில் அமைச்சர்கள், மாவட்டச்செயலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், இளைஞர், இளம்பெண்கள் என திரளானோர் கலந்து கொண்டு உறுதி மொழியேற்றனர்.

குறிப்பாக, திண்டுகல் தொகுதியில் கழகத் துணைப் பொதுசெயலாளர் அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் தலைமையிலும், கன்னியாகுமரியில் கழகத் துணைப் பொதுசெயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையிலும், திருவண்ணாமலை தொகுதியில் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையிலும், திருச்சுழி தொகுதியில் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையிலும், சைதாபேட்டை தொகுதியில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையிலும், ஆவடி தொகுதியில் அமைச்சர் ஆவடி நாசர் அவர்கள் தலைமையிலும், கடலூர் தொகுதியில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையிலும், சிவகங்கை திருப்பத்தூரில் அமைச்சர் பெரியகருப்பன் அவர்கள் தலைமையிலும், புதுக்கோட்டையில் அமைச்சர் ரகுபதி அவர்கள் தலைமையிலும், சேலம் தெற்கு தொகுதியில் அமைச்சர் ராஜேந்திரன் அவர்கள் தலைமையிலும், ஆலங்குடி தொகுதியில் அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் தலைமையிலும், திட்டக்குடி தொகுதியில் அமைச்சர் சி.வி.கணேசன் அவர்கள் தலைமையிலும், ஒட்டன்சத்திரம் தொகுதி அமைச்சர் சக்கரபாணி அவர்கள் தலைமையிலும், கும்பகோணம் தொகுதியில் அமைச்சர் கோ.வி.செழியன் அவர்கள் தலைமையிலும், அருப்புக்கோட்டை தொகுதியில் அமைச்சர் கே.கே.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலும், காஞ்சிபுரம் தொகுதியில் அமைச்சர் காந்தி அவர்கள் தலைமையிலும், திருவெறும்பூர் தொகுதியில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் தலைமையிலும், முதுகுளத்தூர் தொகுதியில் அமைச்சர் ராஜகண்ணப்பன் அவர்கள் தலைமையிலும், திருச்செந்தூர் தொகுதியில் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர், நிர்வாகிகள், பொது மக்கள் ஆகியோர் திரளாக ஒன்றுகூடி உறுதிமொழி ஏற்றனர்.

இதில் நீட் விலக்கு, தொகுதி மறுவரையறை எதிர்ப்பு, வாக்காளர் பட்டியல் மோசடி, கல்வி நிதி மறுப்புக்கு எதிர்ப்பு, தமிழ்த் தொன்மை இருட்டடிப்புக்கு எதிர்ப்பு ஆகிய 5 உறுதிமொழிகளை ஏற்று “தமிழ்நாட்டைத் தலை குனிய விடமாட்டோம்” என உறுதி யேற்றனர். இதே உறுதிமொழி ஏற்பு கரூர் முப்பெரும் விழாவில் (செப். 17) கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நிகழும். இதன் தொடர்ச்சியாக, செப். 2021 அன்று மாவட்ட அளவில் பொதுக்கூட்டங்கள் நடைபெறும்.

இந்த உறுதிமொழி நிகழ்வு, ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறை, நீட் தேர்வு, கீழடி அகழாய்வு, கல்வி நிதி பறிப்பு போன்றவற்றுக்கு எதிரான மாபெரும் மக்கள் போராட்ட இயக்கம். இது இந்திய அரசியலில் மக்கள் பங்குகொள்ளும் மாபெரும் இயக்கம் ஆகும்.